‘மெகா ஸ்டிரீட்’ திட்டத்தின் கீழ்

# சென்னையில் 100 கி.மீ. சாலைகள் மறுவடிவமைப்பு

## வழிகாட்டு கொள்கையை வெளியிட்டார் அமைச்சர்

**சென்னை, பிப். 12:** சென்னையிலுள்ள 100 கி.மீ சாலைகளை மறுவடிவமைப்பு செய்யும் திட்டத்தை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி தொடங்கி வைத்து, அது தொடர்பான வழிகாட்டு கொள்கையை வெளியிட்டார்.

‘மெகா ஸ்டிரீட்’ திட்டத்தின்கீழ் சென்னையில் உள்ள 100 கி.மீ சாலைகளை மறுவடிவமைப்பு செய்ய சென்னை மாநகராட்சி திட்டமிட்டுள்ளது. இதன் தொடக்கவிழா நேற்று சென்னையில் நடந்தது. நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி, தலைமை செயலாளர் சண்முகம், சென்னை மாநகர காவல் ஆணையர் ஏ.கே.விஸ்வநாதன், தமிழ்நாடு மின்சார வாரிய தலைவர் விக்ரம் கபூர், சென்னை மாநகராட்சி ஆணையர் பிரகாஷ், துணை ஆணையர் குமரவேல் பாண்டியன் ஆகியோர் குத்துவிளக்கேற்றி திட்டத்தை தொங்கி வைத்தனர். தொடர்ந்து, சென்னை சாலை மறுவடிவமைப்பு திட்ட கொள்கையை அனைவரும் வெளியிட்டனர்.

நிகழ்ச்சியில் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி பேசுகையில், “முதற்கட்டமாக இந்த திட்டம் சென்னையில் செயல்படுத்தபட உள்ளது. இதனை தொடர்ந்து கோவை, மதுரை, திருப்பூர், ஈரோடு, தஞ்சாவூர், வேலூர் உள்ளிட்ட பிற மாநகராட்சிகளிலும் செயல்படும்” என்றார்,